

தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைகள் துறை அமைச்சராக மீண்டும் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னர் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முதன்முறையாக கரூர் வருகை தந்தார் . கரூர் பயணியர் விடுதியில் அமைச்சரை கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் வரவேற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தென்னிந்திய அளவிலான மாபெரும் பைக் பந்தயம், வீரர்கள் சீறிப்பாய்ந்த வாகனங்கள் பார்ப்போரை வியக்க வைத்தது. 200க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் பங்கேற்பு. பொள்ளாச்சிஅக் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை ஆச்சிபட்டி ரைட் கொங்கு சிட்டி மைதானத்தில். கோவை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் பொள்ளாச்சி ஆச்சிபட்டியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தென்றல் மணிமாறன் ஏற்பாட்டில் மாபெரும் பைக் பந்தயம் நடைபெற்றது. இதில் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்தார். இந்த போட்டியில் தமிழ்நாடு, கேரளா , ஆந்திரா, கர்நாடகா மாநிலம் மற்றும் வெளிநாட்டு போட்டிகளிலும் பங்கேற்ற ஏராளமான பைக் வீரர்கள் கலந்து கொண்டனர். 16 விதமாக போட்டிகள் நடைபெற்றது.இதில் குழந்தைகளுக்கான பைக் பந்தயம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது மேலும் இதில் வெற்றி பெறும் வீரர்களுக்கு ரூபாய் 3.50 லட்சம் மதிப்புள்ள பரிசுகள் மற்றும் கோப்பைகளை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஆகியோர் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினர். இதில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் மகேந்திரன் அவர்கள் கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏற்றி வைத்தார், கழக விவசாய அணி துணை தலைவர் தமிழ்மணி, பொதுக்குழு உறுப்பினர் ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.ஏ.செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன் வரவேற்புரையில் பொள்ளாச்சி பைக் பாபு நன்றி கூறினார். இதில் வழக்கறிஞர் அதிபதி, பனப்பட்டி தினகரன், நவநீத கிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# தி.மு.க. சட்டத்துறை நிர்வாகிகள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. சட்ட திட்டம் விதி 18, 19 பிரிவுகளின்படி, ஏற்கனவே நியமிக்கப்பட்ட தி.மு.க. சட்டத்துறை நிர்வாகிகள் பட்டியல் பின்வருமாறு மாற்றி அமைத்து அறிவிக்கப்படுகிறது.

**தி.மு.க.சட்டத்துறை**

| | | |
|---|---|---|
| தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர் | - | வழக்கறிஞர் பி.வில்சன், பி.எஸ்சி., பி.எல்., எம்.பி. |
| கழகச் சட்டத் துறைத் தலைவர் | - | வழக்கறிஞர் ஆர்.விடுதலை, எம்.ஏ.எம்.எல். |
| சட்டத் துறைச் செயலாளர் | - | வழக்கறிஞர் என்.ஆர்,இளங்கோ, பி.ஏ.பி.எல் எம்.பி. |

சட்டத்துறை இணைச் செயலாளர்கள் - இ.பரந்தாமன், பி.ஏ., பி.எல். எம்.எல்.ஏ. கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., என், மணிராஜ், பி.ஏ, பி.எல், கரூர்கே.எம்.தண்டபாணி, பி.ஏ., பி.எல்., கோவைசு.ராதாகிருஷ்ணன், பி.காம் பி.எல். ஈரோடு பி.ஆர் அருள்மொழி, எம்.ஏ. பி.எல் கோவை. இரா. தாமரைச்செல்வன், பி.எஸ்சி.,பி.எல், தருமபுரி ஜெ.பச்சையப்பன், பி.ஏ., பி.எல். சூர்யா வெற்றிகொண்டான், எம்.ஏ., எல்.எல்.பி.

சட்டத் துறை துணைச் செயலாளர்கள் - கே.சந்துரு, பி.ஏ., பி.எல்., பெ.ரகு, சென்னை, டாக்டர் சந்திரபோஸ், சென்னை, என். மருது கணேஷ், சென்னை, எஸ்.ராஜா முகமது, எம்.ஏ. பி.எல்., திருநெல்வேலி

தலைமைக் கழக வழக்கறிஞர்கள் - கே.ஜெ.சரவணன், பி.ஏ. பி.எல்., வீ. கவிகணேசன், எம்.ஏ., பி.எல்., சென்னை, கே.மறைமலை, பி.ஏ.பி. எல்., நாகை சுவை சுரேஷ், விழுப்புரம், மனோஜ், தூத்துக்குடி, தினேஷ், நாகை, எம்.எஸ்.பி. வீரமணி, திருச்சி, மீஞ்சூர் சுரேஷ், திருவள்ளூர், கலாநிதி, மதுரை வடக்கு

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 07-10-2024.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா!

# மண்டலம் - 5 அளவிலான இறுதி பேச்சுப் போட்டி!

### மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை

ஈரோடு, அக். 9-

தி.மு.க. இளைஞர் அணி துணைச் செயலாளரும் 5வது மண்டலப் பொறுப்பாளருமான கே.இ,.பிரகாஷ் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்களின் வாழ்த்துக்களுடன் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி

ஐந்தாவது மண்டல அளவிலான இறுதி பேச்சுப் போட்டி தலைமை அறிவிக்கும் நடுவர்கள் முன்னிலை யில் நிகழ்ச்சி திருப்பூர் தெற்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கம் திருப்பூரில் 13.10.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணி அளவில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல பத்மநாபன் தலைமையிலும்,

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், செய்தித்துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன், மனித வளம் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ்,

மாவட்ட கழக செயலாளர்கள் சு.முத்துச்சாமி, வி.செந்தில்பாலாஜி, செல்வராஜ் எம்.எல்.ஏ., நல்லசிவம், கார்த்தி, தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேஷ், முபாரக் மாவட்ட அமைப்பாளர்கள் மு.ஜெயக்குமார். தங்கராஜ், சக்திவேல் திருவாசகம், திருவேங்கடம், சபரி கார்த்திகேயன் தன்பால், ஹக்கீம், சசிகுமார் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள் முத்துக்குமார். எம்.எஸ். கே.ராஜு, கே.டி.எஸ் சுதாகர், கரேத்தா பூபதி மற்றும் மாநகர துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும்

சிறப்பு அழைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, கணபதிராஜ் குமார் வணக்கத் திற்குறிய மேயர் தினேஷ் குமார். மாநகர செயலாளர்கள் டி.கே. டி.நாகராஜ், மு.சுப்பிர மணியம், எஸ். பி.கனகராஜ், மற்றும் மண்டலம் 5 உட்பட்ட மாவட்டங்களின் மாவட்ட மாநகர, மாநில ஒன்றிய பேரூர் பகுதி நகர கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அவர்களும் கலந்து கொண்டு 13.10.2024 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி மாலை வரை தொடர்ந்து நடைபெறும்.

மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அனைவரும் மாவட்ட அளவில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களை (கரூர், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு,

திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள்) மாவட்ட மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் காலை 9.00 மணி அளவில் திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்திற்கு பாதுகாப்பாக அழைத்து வருமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் கருங்கல் பாளையத்தில் உள்ள காந்தியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ரமேஷ் குமார், சாதிக் பாட்ஷா, அஸ்ரப் அலி, சோமசுந்தரம், முருகேஷ், ஆர்.ஆர்.கே.பாரதி, நாகராஜ், ரவிக்குமார், சுப்பிரமணி, தமிழ், சண்முகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


